தையும், தோல் பொருள்கள் வெளிநாடுகளிலே விற்பனை குறைவாக இருக்கிற காரணத்தால், பல தனிப்பட்ட தொழிலதிபர்கள் காலணிகளைச் செய்கின்ற தொழிற்சாலையை அவர்கள் தோல் பதனிடும் தொழிற்சாலைக்கு பக்கத்திலேயே வைத்திருப்பதைப் போல, ஆம்பூர், வாணியம்பாடி பகுதிகளில் அவர்கள் வைத்திருக்கிறார்கள், அதைப்போல டான்சி நிறுவனமும் வாணியம்பாடியில் ஒரு காலணிகளைத் தயாரிக்கும் தொழிற்சாலையை நிறுவ அரசு முன் வருமா என்று அறிய விரும்புகிறேன்.

[முற்பகல் 10.40]

மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி: மாண்புமிகு துணைத் தலைவர் அவர்களே, ஏற்கனவே நான் எடுத்துச் சொன்னதைப் போல பல்லாவரத்தில் திரு. நாகப்பச் செட்டியார் அவர்களுக்கு சொந்தமான குரோம் டேனரி, இராணிப்பேட்டையில் தனியார்களுக்குச் சொந்தமான இரண்டு, மூன்று தொழிற்சாலைகள், பல்லாவரத்தில் இருக்கிற கல்யாணம் அண்ட் கம்பெனி, கோவிந்தராஜுலு அவர்களுக்கு சொந்தமான டேனரீஸ், திருச்சியில் இருக்கிற சித்திக் அவர்களுக்குச் சொந்தமான டேனரி, ஆம்பூரில் அப்துல் வகீத் அவர்களின் டேனரி இப்படிப்பட்ட தனியார்களுக்குச் சொந்தமான டேனரிகள் 'குளோஷர்' செய்யப்பட்டிருக்கின்றன என்பதையும் மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய கவனத்திற்குக் கொண்டு வருகிறேன். அடுத்து விண்ணமங்கலத்தில் காலணி தொழிற்சாலை என்று உருவாக்கப்பட வேண்டுமென்ற உணர்வை சொல்லியிருக்கிறார்கள். அது பரிசீலிக்கப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

6. அறிக்கை அளித்தல்.

மதிப்பீட்டுக்குழு.

டாக்டர் கே. சமரசம்: மாண்புமிகு துணைத் தலைவர் அவர்களே, இந்து சமய அறக்கட்டளைகள் (நிர்வாகம்) துறை பற்றிய மதிப்பீட்டுக் குழுவின் அறிக்கையில் கண்டுள்ள பரிந்துரைகள் மீது அரசு மேற்கொண்டுள்ள நடவடிக்கைகள் பற்றிய, மேற்படி குழுவின் ஏழாவது அறிக்கையை (ஏழாவது சட்டமன்றப் பேரவை அளிக்கிறேன்.

7. அரசினர் சட்ட முன்வடிவுகள்.

(அ) சம்பளம் வழங்கல் (மூன்றாம் திருத்த) சட்ட முன் வடிவு தமிழ்நாடு, 1981.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: மாண்புமிகு துணைத் தலைவர் அவர்களே, தமிழ்நாடு 1981ஆம் ஆண்டு சம்பளம் வழங்கல் (மூன்றாம் திருத்த) சட்ட முன்வடிவை பேரவை முன் அறிமுகம் செய்ய அனுமதி கோருகிறேன்.

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப் பெற்று, நிறைவேற்றப் பெற்று, அனுமதி வழங்கப்பெற்றது.

மாண்புமிகு டாக்டர். இரா. நெடுஞ்செழியன் : இச்சட்ட முன் வடிவை பேரவை முன் அறிமுகம் செய்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : இச் சட்ட முன்வடிவு அறிமுகம் செய்யப்பெற்றிருக்கிறது.

சட்ட முன்வடிவு தமிழ்நாடு 1981

(ஆ) நிதி ஒதுக்க (எண் 4)

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : தலைவர் அவர்களே, நான் கீழ்க்கண்ட தீர்மானத்தை மொழிகிறேன் :—
''தமிழ் நாடு 1981-ஆம் ஆண்டு நிதி ஒதுக்க (எண் 4) சட்ட முன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 78/1981) *ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப் பெற வேண்டும்.''

திரு. அ. குமாரசாமி : மன்றத்தினுடைய துணைத் தலைவர் அவர்களே, 1981 ஆம் ஆண்டு ஏப்ரல் திங்கள் 1 ஆம் நாள், தொடங்கிய நிதி ஆண்டில் மேற்கொண்ட பணிகளுக்காக மாநில தொகு நிதியிலிருந்து 'கன்சாலிடேடட் பண்ட்ஸ்' சில கூடுதல் தொகைகளை ஒதுக்கீடு செய்யும் வகையிலே, நம்முடைய நாவலர் அவர்கள் இந்த சட்ட முன்வடிவை இங்கே இந்த மாமன்றத்தினுடைய ஆய்விற்கு வைத்திருக்கிறார்கள். இதிலே எவ்வளவு தொகை நம்முடைய மன்றத்திடமிருந்து ஒப்புதலாக கேட்கிறார்கள் என்று சொன்னால் 155 கோடியே 37 லட்சத்து 80 ஆயிரம் ரூபாய் இந்த மாநில தொகு நிதியிலிருந்து ஒதுக்கீடு செய்யப்பட்டிருக்கிறது. அந்தத் தொகையை அனுமதிக்க வேண்டு மென்று நாவலர் அவர்கள் இந்த மசோதாவை இன்றைக்கு சமர்ப்பித்து இருக்கிறார்கள்.

சட்டமன்றத்திலே இவ்வளவு பெரிய தொகையை ஒதுக்கீடு செய்யும் பொழுது, அரசு இதை முறையாக செலவு செய்ய வேண்டும்: பொறுப்போடு செலவு செய்ய வேண்டும் என்று கோடிட்டு காட்டுவதற்காக எதிர்க்கட்சி வரிசையில் இருக்கிற எங்களுக்கு தார்மீகக் கடமை இருக்கிறது. இந்த அரசிற்கு நினைவூட்ட விரும்புகிறேன், அப்ரோப்ரியேசன் என்பது மிஸ்-அப்ரோப்ரியேசனாக மாறிவிடக் கூடாது என்று கூறிக் கொள்கிறேன். 1977—78-ம் ஆண்டில் நீங்கள் தான் ஆட்சிப் பொறுப்பிலே இருந்தீர்கள். இதுபோன்ற நிதி ஒதுக்கீடு அன்றைக்கு செய்யப்பட்டது. பல்வேறு இனங்களுக்காக, விவசாயத்திற்கு, மருத்துவத்திற்கு, கல்விக்கு, நீர் பாசனத்திற்கு, போக்கு வரத்திற்கு என்று பல்வேறு துறைகளாக இப்படிபட்ட தொகைகள் ஒதுக்கப்பட்டிருக்கிறது. அவைகள் எல்லாம் உங்களால் முறையாக, முழுமையாக செலவு செய்யப்பட்டிருக்கிறதா என்று கேட்டால், இல்லை. இந்த சர்க்காருடைய நிர்வாகம் கோளாறாக இருக்கிறது, சர்க்கார் சரியாக செயல்படவில்லை என்று நானல்ல; நான் சொன்னால் உங்களுக்கு கோபம் வரும், உங்களுடைய கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

---

*1981-ம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் 28 ஆம் தேதியிட்ட தமிழ்நாடு சிறப்பு அரசிதழில் வெளியிடப் பெற்றுள்ளது.